**Starting time 11.40 P.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 351/2002**

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 21.06.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சுந்தரி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> : O.S. No. 351/2002-ன் பிரதிவாதிகளாக இருக்கும் மருதை, முத்தையம்மாள், கங்கையபண்டாரம் ஆகியோர் அசல் வழக்கு எண் 107/2003-ல் 1 முதல் 3 வாதிகளாக இருக்கிறார்களா என்றால், ஆமாம். அசல் வழக்கு எண் 351/2003-ன் மேற்படி நபர்கள் நிரந்தர உறுத்துக்கட்டளை தாவா வேண்டி என்றால், ஆமாம். அசல் வழக்கு எண் 107/2003-ல் நிலுவையில் இருந்த சமயத்தில் நான் அந்த வழக்கில் 4-ம் வாதியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால், ஆமாம்.

2. அசல் வழக்கு எண் 107/2003-ன் எந்த புல எண்ணில் சொந்திற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் புல எண் 70/1 மற்றும் 72/2 ஆகும். எந்த பரிகாரத்திற்காக மேற்படி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால், மேற்படி புல எண்களில் 18 அடியில் செல்லும் வண்டிப்பாதையில் வண்டி வாகனம் போக இயலாதவாறு பிரதிவாதிகள் அவர்களது நிலத்துடன் சேர்த்துக்கொண்டார்கள் அதற்காக வழக்கு போட்டுள்ளேன். 18 அடி அகலம், 290 அடி நீளத்தில் வண்டிப்பாதை செல்கிறது என்று காட்ட ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், போட்டுள்ளேன். எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

3. வண்டிப்பாதையை அவர்களது நிலத்துடன் சேர்த்துக் கொண்டார்கள் என்பது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன் என்றால், இல்லை. வருவாய்துறையினிரடம் மட்டும்தான் புகார் கூறினேன். எழுத்து மூலமாக வருவாய் துறையினரிடம் புகார் கொடுத்தேனா என்றால், இல்லை. எதன் அடிப்படையில் வண்டிப்பாதையில் எனக்கு உரிமை இருக்கிறது என்று கூறி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால், நான் வாங்கிய கிரயப்பத்திரத்தின் அடிப்படையில்தான் எனக்கு வண்டிப்பாதை உரிமை வருகிறது அதன்பேரில்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். யாரிடமிருந்து எந்த தேதியில் கிரயம் வாங்கினேன் என்றால் 2-ம் வாதியிடமிருந்து பத்து வருடங்களுக்கு முன்பாக கிரயம் வாங்கினேன். அந்த கிரய ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் வாங்கிய கிரயப்பத்திரத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல கொடுத்துள்ளேன். எனது தரப்பில் எந்த சான்றாவணங்களும் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், கொடுத்திருக்கிறேன். 2-ம் வாதியிடமிருந்து நான் வாங்கிய நிலம் 1-ம் வாதியின் நிலத்திற்கு தென்புறத்தில் அமைந்துள்ளது என்றால், ஆமாம். என்னுடைய நிலத்திற்கும் 3-ம் வாதியின் நிலத்திற்கும் இடையே ஓடை போகிறது என்றால், ஆமாம். என்னுடைய நிலத்தில் கிழமேலாக அந்த ஓடை சென்று வடபுறம் திரும்பி தென்வடலாக சென்று மீண்டும் கிழமேலாக சென்று சிவசங்கரபுரத்தில் சென்று தேவியாக்குறிச்சி செல்லும் சாலையும் தாண்டி செல்கிறது என்றால், ஆமாம்.

5. ஓடைக்கும் வடக்கில் ராஜாமணி நிலம் இருக்கிறது என்றால், ஆமாம். ராஜாமணி என்பவர் என்னுடைய கணவரின் அண்ணி என்றால், ஆமாம். ராஜாமணியின் நிலமும் ஓடை புறம்போக்குதான் என்றால், ஆமாம். ராஜாமணியின் நிலத்திற்கு தென்புறமாகவும், ஓடைக்கு வடபுறமாகவும் ஒரு பாதை செல்கிறது என்றால், சரியல்ல. ஓடைக்கு தென்புறமாகத்தான் செல்கிறது. ராஜாமணியின் நிலத்திற்கு தென்புறமாகவும், ஓடைக்கு வடபுறமாகவும் 2-ம் வாதியிடமிருந்து நான் வாங்கிய சொத்து வரையிலும் ஒரு பாதை செல்கிறது என்றால், சரியல்ல. ராஜாமணியின் நிலத்திற்கு தென்புறத்தில் பாதையே இல்லை. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், ஓடைக்கு வடபுறமாக மேற்சொன்ன ஒரு பாதை செல்கிறது

என்றாலும் சரியல்ல.

6. 2-ம் வாதியிடமிருந்து நான் கிரயம் பெற்ற நிலத்திற்கு வடபுறத்தில் 1-ம் வாதி நிலம் உள்ளது என்றால், ஆமாம். 1-ம் வாதியின் நிலத்திற்கு வடபுறத்தில் தலைவாசல் ஏரிவாய்க்கால் உள்ளது என்றால், ஆமாம். ஏரி வாய்க்காலுக்கும் வடபுறத்தில் 1-ம் வாதிக்கு நிலம் உள்ளது என்றால், ஆமாம். 1-ம் வாதி நிலத்திற்கும் அருணாசலம் நிலத்திற்கும் இடையே ஒரு பாதை செல்கிறது என்றால், ஆமாம். அது அவர்களது பாதை. கணேசன் நிலத்திற்கும், ராஜாமணி நிலத்திற்கும் இடையே என்னுடைய நிலமும், வீடும் இருக்கிறது என்றால், ஆமாம். ராஜாமணி நிலத்திற்கும், வீட்டிற்கும் என்னுடைய வீட்டிற்கும், நிலத்திற்கும் வடக்கில் 30 அடி அகலத்தில் பாதை உள்ளது என்றால் 18 அடி அகலத்தில் பாதை உள்ளது. அந்த தடம் சிவசங்கராபுரம் தேவியாக்குறிச்சி பாதையில் சேர்கிறது என்றால், ஆமாம். சிவசங்கராபுரம் தேவியாக்குறிச்சி செல்லும் பொது பாதைக்கு கிழக்கே செல்லப்பிள்ளை என்பவரிடம் நான் நிலம் வாங்கியுள்ளேன் என்றால், ஆமாம். அந்த நிலத்திற்கு வடபுறத்தில் 18 அடி அகலத்தில் கிழமேலாக ஒரு பாதை சென்று சிவசங்கராபுரம் பாதையை அடைகிறது என்றால், ஆமாம். 1-ம் பிரதிவாதி ஆறுமுகத்திடம் நான் கிரயம் வாங்கியுள்ளேன் என்றால், ஆமாம். அந்த நிலத்திற்கு கிழக்கில் 2-ம் பிரதிவாதி மணியின் நிலம் இருக்கிறது என்றால், ஆமாம்.

7. 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் நிலங்கள் தேவியாக்குறிச்சிற்கு செல்லும் பாதைக்கு மேற்குபுறத்தில் இருக்கிறது என்றால், ஆமாம். 1, 2 பிரதிவாதிகளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் தான் என்றால், ஆமாம். அசல் வழக்கு எண். 108/2015 சார்பு நீதிமன்றம், ஆத்தூர் என்ற வழக்கில் 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் பூர்வீக நிலங்கள் பொறுத்து 2-ம் பிரதிவாதி மணியின் மக்கள் என்னுடைய கணவரையும் 12-ம் பிரதிவாதியாக சேர்த்து, பாகப்பபீரவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், அதுப்பற்றி எனக்கு தெரியாது.

8. என் கணவர் பெயரில் வழக்கு தாக்கல் செய்துவிட்டதால்தான் என்னுடைய பெயரில் ஒரு தவறான கிரயப்பத்திரத்தை ஏற்படுத்தி சொத்தை வாங்கிக்கொண்டார் என்றால், இல்லை. நான் 1-ம் பிரதிவாதி ஆறுமுகத்திடம் கிரயம் பெற்ற நிலத்திற்கும் ஒரு பெரியசாமிபிள்ளையின் நிலத்திற்கும் இடையே 18 அடி அகல பாதை சென்று சிவசங்கராபுரம் தேவியாக்குறிச்சி பாதையை அடைகிறது என்றால், ஆமாம். 1-ம் பிரதிவாதி ஆறுமுகம் மற்றும் 3-ம் பிரதிவாதி

பெரியசாமியின் புறம்போக்கு நிலங்கள் தற்போது 2-ம் பிரதிவாதி மணியின் அனுபவத்தில் உள்ளது என்றால், எங்களுடைய தாவா வண்டிப்பாதைக்கும் வடக்கில் ஆறுமுகத்திற்கு புறம்போக்கு நிலம் உள்ளது, 3-ம் பிரதிவாதி பெரியசாமிக்கு புறம்போக்கு நிலம் இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. மேற்படி நிலங்கள் மணியின் சுவாதீனத்தல் இருக்கிறதா என்றால், அதுப்பற்றி எனக்குத் தெரியாது. நான் கூறுவது போல தாவா வண்டிப்பாதையையே இல்லை என்றாலும், ஆறுமுகத்திற்கும் அந்த வண்டிப்பாதைக்கும் வடக்கில் நிலம் எதுவும் இல்லை என்றால், சரியல்ல.

9. முத்தாம்மாளிடம் நான் வாங்கிய நிலத்திற்கு தாவா வண்டிப்பாதைத்தான் பாதை. மேற்படி நான் கூறிய சங்கதி தவறானது என்றால், சரியல்ல. 05.06.2013 தேதி அன்றுதான் நான் கிரயம் வாங்கினேன் என்றால், ஆமாம். 2-ம் வாதியிடம் நான் வாங்கிய நிலத்திற்கான மூலப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். நான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றாலும், அந்த ஆவணத்தில் தாவா வண்டிப்பாதை குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றாலும், அதை தாக்கல் செய்தால் எனது வழக்கிற்கு விரோதமாக போய்விடும் என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. இரண்டு தாவாக்களும் நிலுவையில் இருந்த சமயத்தில் தாவா வண்டிப்பாதை இருந்ததாக சொல்லி ஒரு பொய்யான ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால், சரியல்ல.

10. என்னுடைய கிரய ஆவணத்தில் 8-ஆம் பக்கத்தில் தாவா வண்டிப்பாதை குறித்து சொல்லப்பட்டுள்ள சங்கதி பொய்யானது என்றால், சரியல்ல. என்னுடைய கிரயப்பத்திரத்தின் தேதியில் சர்வே எண் 72/17-ல் நிலத்தில் இல்லை என்றால், சரியல்ல இருக்கிறது. புல எண் 72/17-ல் என்றுமே 6 மீட்டர் அகலத்தில் நான் கூறுவது போல தாவா வண்டிப்பாதை இருந்தது என்றால், சரியல்ல. மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர், வட்டாட்சியர் ஆகியோரின் உத்தரவின் பேரில் 24.09.2004- தேதி அன்று புல எண் 72/1-ல் இருந்து 72/17 வரையிலும ஆன உட்பிரிவுகள் நீக்கம் செய்யப்பட்டு பழையே நிலைக்கே ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றால், சரியல்ல. பழைய நிலை என்றால், புல எண் 72 என்றால், ஆமாம். தீர்வை ஏற்படாத தரிசு ஓடை புறம்போக்கு என்ற நிலையில்தான் புல எண் 72 உள்ளது என்றால், சரியல்ல. புல எண் 72-ஐ தீர்வை ஏற்பட்ட தரிசு நிலமாக மாற்ற நில நிர்வாக ஆணையர் மூலமாக எந்த நடவடிக்கை எடுத்தேனா என்றால்,

அதுப்பற்றி எனக்கு தெரியாது. ஓடை புறம்போக்கானது நீர் நிலை புறம்போக்காக உள்ள நிலையில் அதில் பாதை என்னால் கோர இயலாது என்றால், விவசாய நிலங்களுக்கு தாவா வண்டிப்பாதைத்தான் பாதையாக உள்ளது.

11. அக்கம் பக்கத்தில் உள்ள விவசாய நிலங்களுக்கு அவரவர் நிலங்களிலேயே பாதை இருக்கிறது என்றாலும், ஓடை புறம்போக்கில் யாரும் பாதையாக பயன்படுத்தவில்லை என்றால், 15 பேர்கள் பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள். நான் கூறும் 15 பேர்களையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், தாவா தடத்தில் செல்லும் 3 பேரும் தரப்பினராகளாகதான் இருக்கிறார்கள். நான் சொல்லும் 3 பேரும் தாவா தடத்தை பயன்படுத்த வில்லை என்றால், சரியல்ல. தாவா சொத்திலிருந்து தேவியாக்குறிச்சி கிராமம் எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால், 500 அடி தூரத்தில் உள்ளது. தேவியாக்குறிச்சி கிராமம் 2, 3 கிலோமீட்டர் தூரத்தில்தான் உள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல.

12. தாவா தடத்தை பொதுமக்களும் பயன்படுத்துவதாக வழக்கில் கூறியுள்ளேன் என்றால், ஆமாம். இந்த வழக்கில் பொது மக்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரியல்ல. பிரதிநிதித்துவ முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்யாததால் வழக்கிற்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. 05.06.2013 தேதி அன்று வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் நான் கிரயம் பெற்று இருப்பதால் லிஸ்பெண்டன்ஸ் என்ற முறையில் வழக்கு பாதிப்புப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. 2-ம் வாதி தன்னுடைய நிலத்திற்கு தாவா பாதையை பயன்படுத்தாத நிலையில் அந்த பாதையில் உரிமை வழங்கி எனக்கு கிரயம் கொடுக்க அவருக்கு அருகதை இல்லை என்றால், சரியல்ல.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time: 12.40 P.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஆத்தூர்.